S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products AUTHORISED SERVICE PROVIDER
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி நவம்பர் 07 * 2025 * மலர் -1 * இதழ்-159* VOL-1 * ISSUE-159 விலை ரூ.3 * பக்கம் -4



பீகாரில்நேற்றுமுதல்கட்டதேர்தல்நடைபெறுகிறது.தலைநகர்பாட்னாவில்உள்ளஒருவாக்குச்சாவடியில்வாக்காளர்கள் வாக்கு அளிப்பதற்காக வரிசையில் நிற்கும் காட்சி.

### தொகுதி வாரியாக நேர்காணல்:

## தேர்தலில் தோற்றால் கட்சிப்பதவி பறிக்கப்படும்!

### தி.மு.க நிர்வாகிகளுக்கு ஸ்டாலின் எச்சரிக்கை!!



**சென்னை,நவ.7**

சட்டசபை தேர்தலை முன்னிட்டு, தொகுதி வாரியாக முதலமைச்சர் ஸ்டா லின் “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் நிர்வாகி களை சந்தித்து வருகிறார். அதன்படி, இன்று நடந்த ஆலோசனை கூட்டத்தில், தேர்தலில் தோற் றால்கட்சிப்பதவிகள்பறிக்கப்படும்என்றுநிர்வாகிகளுக்கு ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடை பெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கை களை தீவிரப்படுத்தி வருகின்றன. பிரசாரம், பொதுக்கூட் டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோ சனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவா லயத்தில் கட்சி நிர்வாகி களுடன் தி.மு.க தலைவரும், முத லமை ச்சருமான மு.க. ஸ்டாலின் இன்று ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின்போது தொகுதியில் கட்சி செயல்பாடுகள், கள நிலவரம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டா லின் ஆலோசனையில் ஈடுபட்டார். இதன்படி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ‘ஒன்டூஒன்’ சந்திக்கும் உடன்பிறப்பே வா நிகழ்ச்சியில் இன்று சங்கரன்கோவில், நெல்லை தொகுதி திமுக நிர்வாகி களை சந்தித்தார். அதில் தெற்கு மண்டல பொறுப்பாளர் கனிமொழி எம்.பி.யும் பங்கேற்றிருந்தார்.

இந்நிலையில் நெல்லை தொகுதியில் வெற்றி பெறவில் லையென்றால் பதவிகள் பறிக்கப்படும் என்று உடன்பி றப்பே வா சந்திப்பில் மாவட்டச் செயலாளர் உட்பட அனைத்து நிர்வாகிகளுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரடி எச்சரிக்கை விடுத்துள்ளதாக தக வல் வெளியாகி உள்ளது.

மேலும், எஸ்ஐஆர் பணிகளில் உள்ள குழப்பங்களினால் லட்சக்கணக்கான வாக்காளர்கள் நீக்கப்படும் அபாயம் உள்ளது என்பதால் வாக்காளர்களின் விவரங்களை சேகரிக் கும் பணிகளுக்கு திமுகவினர் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என உடன்பிறப்பே வா நிகழ்ச்சியில் நிர்வாகிகளிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார். இதுவரை, 33 நாட்களில் 73 சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளை சந்தித்து, முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

### மூத்த அமைச்சர்கள் பங்கேற்பு :

## தலைமைச் செயலகத்தில் அனைத்து கட்சிக் கூட்டம்!

### பொதுக்கூட்டங்கள், பரப்புரைகள் நடத்த வழிகாட்டு நெறிகளை வகுக்க ஆலோசனை!!





**சென்னை, நவ.7**

பொதுக்கூட்டங்கள் மற்றும் பரப்பு ரைகள், ரோட் ஷோக்களுக்கான கட் டுப்பாடுகள் விதிப்பது குறித்து வழிகாட்டு நெறிமுறைகளை வகுப் பது குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று ( நவ. 6) அனைத்து கட்சிக் கூட்டம் நடைபெற் றது.இதில்.மூத்த அமைச்சர்கள் பங் கேற்றனர். த.வெ.க. தலைவர் விஜய் கலந்துகொண்ட கரூர் பிரசாரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலி யான சம்பவம் நாடு முழுவதுமே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி யது. இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது. இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்த சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியதன் படி, தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங் கள் மற்றும் பரப்புரைகள் நடத்துவது குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக தங்கள் கருத்து கள் மற்றும் ஆலோசனைகளை தெரி விப்பதற்காக தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உறுப் பி னர்களைக் கொண்ட கட்சிகள் பிரதி நிதிக ளுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று காலை 10.30 மணிக்கு சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10ஆவது தளத்தில் மூத்த தலைவர் அமைச்சர்க ளின் தலைமையில் நடைபெற் றது. எந்த அசம்பாவிதமும் ஏற்படா மல் அரசியல் கட்சிக் கூட்டங்கள் மற்றும் ரோடு ஷோக்களை நடத்து வது எப்படி? அதற்கு அனுமதி வாங் குவதற்கான வழிமுறைகள் என்ன? கூட்டத்தை ஒருங்கிணைக்க எடுக்கப் பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன? கூட்டம் நடத்தும் அரசியல் கட்சித் தலைவரின் கடமைகள் என்ன? என்பன உள்ளிட்டவற்றை ஆராய்ந்து, விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இந்த அனைத்துக் கட் சிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட தாக அரசு அதிகாரிகள் தெரிவித்தனர் மேலும் கூட்டத்தில் விவாதிக்க ப் பட்ட முக்கிய அம்சங்களில், கூட்டங் களுக்கு அனுமதி கோரும் அரசியல் கட்சிகள், வருகை தரும் பொதுமக்க ளுக்கான தண்ணீர், மருத்துவ உதவி, கழிப்பறை வசதிகள் போன்ற அடிப் படை தேவைகளை முறையாக ஏற் பாடு செய்ய வேண்டும் என்பதும் அடங்கும். மேலும், காவல்துறை வழங்கும் ஆலோசனைகளை முழு மையாக பின்பற்றுவது கட்டாயமாக் கப்படும் என்றும், எதிர்ப்பு தெரிவிக் காத வகையில் சட்டரீதியான நிபந்தனைகள் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்திற்கு தேர்தல் ஆணை யத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்ப ட்டிருக்கிறது. எனவே, தமிழக வெற்றிக் கழகத்திற்கு அனைத் துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படவில்லை என் பது குறிப்பிடத்தக்கது.

## பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயனடைந்த கோவை மாவட்ட பயனாளிகள் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களது நன்றியினை தெரிவித்தனர்



பெண் குழந்தைகளுக்கு சம உரிமை மற்றும் பாதுகாப்பை வழங்கும் நோக்கில் தமிழ்நாடு அரசு “பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்” என்ற சிறப்பு நலத்திட் டத்தை தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமா



னது பெண் குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் எதிர்கால பாதுகாப்பை உறுதி செய்வதா கும். மேலும், குழந்தை திருமணத் தைத் தடுக்கவும், பெண்குழந் தையை குடும்பத்தில் மதிப்புடன் வளர்க்கவும் இந்தத் திட்டம் உதவு கிறது. பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கடந்த 2021 2025 வரையிலான நான்கரை ஆண்டுக ளில் அன்னூர் வட்டாரத்தில் 329 பயனாளிகள், ஆனைமலை வட் டாரத்தில் 322 பயனாளிகள், கார மடை வட்டாரத்தில் 614 பயனா ளிகள், மதுக்கரை வட்டாரத்தில் 287 பயனாளிகள், பொள்ளாச்சி வடக்கு வட்டாரத்தில் 234 பயனா ளிகள், பொள்ளாச்சி தெற்கு வட் டாரத்தில் 238 பளனாளிகள், சூலூர் வட்டாரத்தில் 393 பயனா ளிகள், சுல்தான்பேட்டை வட்டா ரத்தில் 163 பயனாளிகள், தொண் டாமுத்தூர் வட்டாரத்தில் 323 பயனாளிகள், கிணத்துக்கடவு வட் டாரத்தில் 182 பயனாளிகள், சர்க் கார்சாமக்குளம் வட்டாரத்தில் 160 பயனாளிகள், பெரியநாயக்கன்பா ளையம் வட்டாரத்தில் 370 பயனா ளிகள், வால்பாறை வட்டாரத்தில் 90 பயனாளிகள், மத்திய மண்ட லத்தில் 317 பயனாளிகள், கிழக்கு மண்டலத்தில் 226பயனாளிகள், வடக்குமண்டலத்தில் 231, தெற்கு மண்டலத்தில் 296, மேற்கு மண்ட லத்தில் 277 பயனாளிகள் என வட் டார வாரியாக மொத்தம் 5052 பய னாளிகளுக்கு தலா ரூ.25000/ மதிப்பிலான வைப்புநிதி பத்திரங்கள் சுமார் ரூ.12.63 கோடி பெற்று வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் கடந்த 2021 முதல் 2025 வரையி லான நான்கரை ஆண்டுகளில் 2021 2022 ஆம் நிதி ஆண்டில் 1463 பயனாளர்களுக்கும், 2022 2023 ஆம் நிதி ஆண்டில் 3496, பயனாளர்களுக்கும் 2023–2024 ஆம் நிதி ஆண்டில் 2705, பயனா



ளர்களுக்கும் 2024 2025 ஆம் நிதி ஆண்டில் 2556 பயனாளர்களுக் கும் 2025 2026 ஆம் நிதி ஆண்டில் நாளது தேதி வரை1205 பயனாளர் களுக்கும் மொத்தம் 11425 பயனா ளர்களுக்கு முதிர்வு தொகை



பெற்று வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் கீழ் பயனடைந்த பய னாளியான மதியழகன்நகர், கோழிபன்னைக்காடு, சூலூரை சார்ந்த பழனிசாமி, ராதா தம்பதி யர் நிறைந்த மனம் நிகழ்ச்சியில் தெரிவித்ததாவது,

நாங்கள் சூலூரில் வசித்து வருகி றோம். எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். கூலி வேலை செய் துதான் எங்கள் குழந்தை களை வளர்த்து வந்தோம். சமூக நலத்து றையின் வாயிலாக இரண்டு பெண்குழந்தைகள் காப்போம் திட்டத்தின் கீழ் அவர்கள் சிறுகு ழந்தைகளாக இருக்கும்பொழுது விண்ணப்பி த்திருந்தோம். தற் போது 18வயது நிறைவடை ந்த என்னுடைய மகள் சீதாலெட்சுமி கல்லூரியில் இளங்கலை பட்டப்ப டிப்பு படித்து வருகிறாள். அவ ளுக்கு 18வயதுநிறைவடைந்ததை யொட்டி இரண்டு பெண்குழந்தைகள் காப்போம் திட்டத்தி ன்கீழ், முதிர்வு தொகை யாக ரூ.4,19,000/ வட்டியுடன் சேர்த்து கிடைத்தது. அத்தொ கையை கொண்டு அவளது கல் லூரி ஆண்டு கட்டணம் செலுத்தி னோம். எங்கள் மகள் கல்லூரி படிப்பை முழுமையாக முடிப்ப தற்கு இந்த தொகை மிகவும் பய னுள்ளதாக இருக்கிறது. ஏழ்மை நிலையில் வாழும் எங்களை போன்றவர்களுக்கு இத்திட் டத்தை தந்த முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரி வித்துக் கொள்கிறேன் என தெரி வித்தார்.

**தொகுப்பு**
**ஆ.செந்தில் அண்ணா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**இரா.சரண்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
கோயம்புத்தூர் மாவட்டம்.



கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், வெலகலஹள்ளி ஊராட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக, ஆடு வளர்ப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ், ஆடுகள் பெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த பயனாளியிடம், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில், திட்டத்தின் பயன் குறித்து கலந்துரையாடினார். உடன், திட்ட இயக்குநர் மகளிர் மேம்பாட்டு திட்டம் பெரியசாமி, வாழ்ந்து காட்டுவோம் திட்ட அலுவலர் ரமேஷ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### காவேரிப்பட்டிணத்தில் 8 —ந் தேதி

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்!

**கிருஷ்ணகிரி, நவ.7**

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப் பட்டிணம் அரசு ஆண்கள் மேல்நி லைப் பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம் நடை பெற உள் ளது. தமிழ் நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, "நலம் காக் கும் ஸ்டாலின்" திட்ட மருத் துவ முகாம்



கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி யில் 08.11.2025 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெற உள்ளது.

இம்மருத்துவ முகாமில் பொதுமக்க ளுக்கு தேவையான இரத்த பரிசோதனை, கர்ப்பிணி தாய்மார்களுக்கு, X&Ray, ECG, ECHO, Ultra Sound, கண் பரிசோதனை மற் றும் மகப்பேறு மருத்துவம் போன்ற 17 வகையான சிறப்பு நிபுணர்களைக் கொண்டு பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட உள்ளது. மேலும், இம்முகா மிற்கு வரும் பொதுமக்களுக்கு முதல மைச்சர் காப்பீட்டு திட்ட அட்டை வழங்கப்படு கிறது. மாற்றுத்திறனாளிக ளுக்கும் மற்றும் தொழிலாளர்களுக்கும் இலவசமாக அடையாள அட்டை வழங் கப் படுகிறது. அனைத்து பொதுமக்களுக்கும் இலவச மாக உடல் பரிசோதனைகள் மற்றும் இருதய பரிசோதனை செய்யப்படுகிறது.

இம்முகாமில் தொற்றா நோய், உயர் இரத்த அழுத் தம், கண் பார்வை பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை,

இதய பரிசோதனை மற்றும் நரம்பியல் மருத்துவம், சித்த மருத்துவம், பெண்களுக்கான மார்பக புற்று நோய் பரி சோதனை மேலும் பல் சிகிச்சை உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை மேற் கொள்ளப்பட உள் ளதால் அனைத்து பொது மக்களும் கலந் துக்கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்.ச தினேஷ் குமார் தெரி வித்துள்ளார்.




விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில், மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் (DISHA), மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு தலைவர்/விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷேக்ஷேக் அப்துல் ரஹ்மான், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஜெ.மணிக்கண்ணன், ஆகியோர் முன்னிலையில் இன்று (05.11.2025) நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி.ஜெ.இ.பத்மஜா, ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் திரு.கண்ணன், ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் கொசுமருந்து அடிக்கும் பணி!

## மேயர் ஜெகன் பெரியசாமி தொடங்கி வைத்தார்!!

தூத்துக்குடி நவ.7

தூத்துக்குடி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்களை கட்டுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் முதற்கட்டமாக வாங்கப்பட்டுள்ள கொசு மருந்து தெளிக்கும் இயந்திரத்தை மாநகராட்சி அலுவலகத்தில்மேயர்ஜெகன்பெரியசாமிபார்வையிட்டு அப்பணியை தொடங்கி வைத்தார். உடன் நகர் நல அலுவலர் சரோஜா, சுகாதார ஆய்வாளர் ராஜபாண்டி, பகுதி செயலாளர் ரவீந்திரன், கவுன்சிலர் அந்தோணி பிரகாஷ், மார்ஷலின், வட்ட செயலாளர் ரவீந்திரன் உள்பட பலர் உடனிருந்தனர்.



தூத்துக்குடி மாவட்டம், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் 2026ஐ முன்னிட்டு தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வள்ளிநாயகிபுரத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், பார்வையிட்டார். உடன் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் சி.பிரியங்கா, உதவி ஆட்சியர் (பயிற்சி) தி.புவனேஷ் ராம், தூத்துக்குடி வட்டாட்சியர் திருமணி ஸ்டாலின் ஆகியோர் உள்ளனர்.

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தேனீ வளர்ப்பு, தேன் மதிப்புக்கூட்டல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!



திருவண்ணாமலை.நவ.7

அண்ணாமலை பல்கலைக்கழகம் பண்ருட்டியைச் சேர்ந்த எஸ். கே மோனிஷாநேச்சுரல்ஹனி மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த விவேகானந்தா டிரஸ்ட் ஆகியவற்றுடன் இணைந்து தேனீ வளர்ப்பு மற்றும் தேன் மதிப்பூட்டல் தொழில் முனைவோர்களை உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நவம்பர் மாதம் 5 ஆம் நாள் 2025 அன்று அண்ணாமலை பல்கலைக்கழக வளாகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வணிக ரீதியில் தேனீ வளர்ப்பை ஊக்குவிப்பதாகவும், தேனின் தரத்தை மேம்படுத்துவதையும், தேனை அடிப்படையாகக் கொண்ட மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளை உருவாக்குவதையும், நோக்கமாக கொண்டுள்ளது. இதன் மூலம் நிலைத்த வேளாண்மை தொழில் முனைவு மற்றும் கிராமப்புற வாழ்வாதார முன்னேற்றம் மேம்படுவதாக எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேனீ வளர்ப்பு மற்றும் தேனை அடிப்படையாகக் கொண்ட தொழில் தொடங்குவதற்கு பயிற்சி வழங்கி தொழில் முனைவராக உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் வாய்ப்புகளை வழங்குவதாக அமையும். இப்புரிந்துணர் ஒப்பந்தம் அண்ணாமலை பல்கலைக்கழக துணைவேந்தர் குழு உறுப்பினர் முனைவர். எஸ் அறிவுடைநம்பி அவர்களின் முன்னிலையில், பதிவாளர் முனைவர். எம். பிரகாஷ், எஸ். கே. மோனிஷா நேச்சுரல் ஹனி டி ஃபார்ம் உரிமையாளர். திரு. ஜி. செல்வகுமார் மற்றும் விவேகானந்தா டிரஸ்ட் தலைவர் முனிவர். டி. பாலு ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில் புரிந்துணர்வு ஒப்பந்த மையம் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர், முனைவர். பி. கருப்பையா, திட்டத்தின் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள், முனைவர். எஸ். விஷ்ணு தேவி, திரு. கே. எஸ். திலீபன், துணைவேந்தர் அவர்களின் நேர்முக உதவியாளர், திரு. எச். பாக்யராஜ் மற்றும் புரிந்துணர்வு மையம் தனி அதிகாரி, எஸ்.பாலாஜி ஆகியோர்கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பேசிய அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் குழு உறுப்பினர் முனைவர், எஸ். அறிவுடை நம்பி அவர்கள், இந்த ஒப்பந்தம் தொழில் முனைவோர், கல்வியாளர்கள் மற்றும் வேளாண் சார்ந்த விவசாய பெருமக்களை ஒருங்கிணைத்து தேனீ வளர்ப்பை மேம்படுத்தி, தேன் சார்ந்த புதிய தொழில் வாய்ப்புகளை மாணவர்கள் மற்றும் விவசாய பெருமக்களுக்கு வழங்குவதாக அமையும். மேலும், இத்திட்டத்தின் செயல் பகுதியான கல்வராயன் பச்சமலை மற்றும் ஜவ்வாது மலைப்பகுதியில் உள்ள விவசாய பெருமக்களுக்கு தேனீ வளர்ப்பு சம்பந்தமான தொழில்நுட்ப விவரங்களை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாக அமையும் என விளக்கினார்.

# வாக்காளர் பட்டியில் சிறப்பு தீவிர திருத்தம்:

# சர்வதேச மக்கள் உரிமைகள் கழகம் நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும்!

ஒட்டன்சத்திரம் நவ.7

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் சர்வதேச மக்கள் உரிமைகள் கழகம் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சர்வதேச மக்கள் உரிமைகள் கழகம் நிறுவனத்தலைவர் மற்றும் கழக பொதுச்செயலாளர் திண்டுக்கல் எஸ்.முக மதுரிஜ்வான் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி நவ. 4ம் தேதிமுதல் டிச. 4ம் தேதிவரை வாக்குச்சாவடி நிலை அலுவலர் வீடுதோறும் கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுவார். அப்பணியில் நமது சர்வதேச மக்கள் உரிமைக்கழகத்தின் நிர்வாகிகள் உடன் சென்று உண்மையான வாக்காளர்கள் விடுபடாமல் இருக்க உதவவேண்டும்.

அப்போது வாக்குச்சாவடி நிலை அலுவலர் கணக்கெடுப்பு படிவத்தில் இரு பிரதிகளை வழங்குவார் அதில் தேவையான இடத்தில் தேவையானவற்றை பூர்த்தி செய்து சமீபத்திய புகைப்படத்தை ஒட்டவேண்டும்.

படிவம் நிரப்புவதில் ஏதேனும் உதவி தேவைப்பட்டால் வாக்குச்சாவடி நிலை அலுவலரை அணுகவேண்டும். மேலும் நிரப்பிய படிவத்தை வாக்குசாவடி நிலை அலுவலரிடம் ஒப்படைத்துஒருபிரதியில் அவரது ஒப்புகை பெற்று வாக்காளருக்கு வழங்கவேண்டும். எனவே சர்வதேச மக்கள் கழகம் நிர்வாகிகள் வீடு, வீடாக சென்று ஒவ்வொரு வாக்காளரிடத்திலும் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், வாக்கு விடுபடாமல் இருப்பதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும் வாக்களர்பட்டியல்சிறப்பு தீவிர திருத்தம் பணி முடிந்த பின்பு வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 9ம் தேதி வெளியிடப் படவுள்ளது. வாக்காளர் பட்டியல் பெயர் சேர்க்கை ஃ மறுப்புரைக்கான ஃ விண்ணப்பங்களுக்கான காலம் டிச. 9 முதல் ஜன. 8ம் தேதி 2026 ஆகும். இறுதி வாக்காளர் பட்டியல் பிப். 7ம் தேதி 2026 ஆகும்.

அனைத்து பொதுமக்களும் இந்த சிறப்பு தீவிர திருத்தப்பணியில் மிகவும் கவனமுடன் செயல்பட நிர்வாகிகள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் உள்ளிட்ட கருத்துக்கள் பேசப்பட்டது. முன்னதாக பெண்கள்உலக கோப்பை கிரிக்கெட்டில் இந்திய அணி, தென் ஆப்பிரிக்காவை தோற்கடித்து கோப்பையை கைப்பற்றியது.

52 ஆண்டு கால பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் வரலாற்றில் இந்திய அணி முதல் முறையாக மகுடம் சூடியதற்கு வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது.

முடிவில் சர்வதேச மக்கள் உரிமைகள் கழகத்தின் நிர்வாகி மாரிமுத்து நன்றி கூறினார்.



ஜனவரி மாதத்தில் ரோஜா மலர்கள் பூக்கும் வகையில் தற்போது முதல் பாத்தியில் கவாத்து பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தூத்துக்குடி பண்டாரம்பட்டி கிராமத்தில் கஞ்சா மது போதை கும்பல் கொலை மிரட்டல்:

# காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க விட்டால் நாடார் பேரவை சார்பில் போராட்டம் நடத்தப்படும் என அறிவிப்பு!

தூத்துக்குடி நவ.7

தூத்துக்குடி மாநகராட்சி 1வது வார்டு பகுதியில் அமைந்துள்ளது பண்டாரம் பட்டி இந்த பகுதியில் தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர் இந்த கிராமத்தில் நாடார் சமுதாயத்தை சேர்ந்த தன சிங் என்பவரது குடும்பத்தினர் மட்டும் வசித்து வருகின்றனர் தன சிங் இறந்துவிட தனசிங்கின் மனைவி சசிகலா மற்றும் மகன்கள் பிரதீப், பிரேம்நாத் மற்றும் அவரது தங்கை ஆகியோர் குடும்பத்துடன் இசக்கியம்மன் கோவில் தெருவில்; வசித்து வருகின்றனர். மேலும் வீட்டில் வைத்து டிஸ்டில்டு வாட்டர் தயாரித்து விற்பனை செய்யும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பண்டாரம்பட்டி பகுதியில் நடைபெற்ற கோவில் திருவிழாவின் போது கஞ்சா மது போதையில் இருந்த சில இளைஞர்கள் பிரதீப் மற்றும் அவரது அண்ணன் பிரேம்நாத் ஆகியோரை தாக்கி மிரட்டல் விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 26ம் தேதி அக்கா பிரபாவதியின் குழந்தைக்கு பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பிரதீப் மற்றும் அவரது குடும்பத்தினர் ஈடுபட்டு கொண்டு இருந்துள்ளனர் அப்போதுஅவர்கள்வீட்டு முன்பு இயக்குனர் மாரி செல்வராஜின் பைசன் படம் பார்த்துவிட்டு வந்த கஞ்சா மது போதையில் வந்த கும்பல் பிரதீப்பின் ஜாதி பெயரை சொல்லி திட்டியதுடன் பசுபதி பாண்டியன் ஸ்டைலில் கொலை செய்து விடுவோம் என மிரட்டி சென்றுள்ளனர்.

தூத்துக்குடியில் இருந்து பிறந்தநாள் கொண்டாடத்திற்கு வந்திருந்த அசோக் குமார்என்பவரைஊருக்கு வெளியே கொண்டு சென்று விடுவதற்காக பிரதீப் மற்றும் அசோக்குமார் ஒரு பைக்கிலும் அவரது அண்ணன் பிரேம்நாத் மற்றொரு பைக்கிலும் பண்டாரம்பட்டி கிராமத்தில் உள்ள சந்தன மாரியம்மன் கோவில் அருகே சென்று கொண்டிருந்தனர். அப்போது இவர்களை மறித்த பண்டாரம் பட்டி கிராமத்தைச் சேர்ந்த கஞ்சாமற்றும்மதுபோதையில் இருந்த அஸ்வின், பரத், முத்தமிழ் மற்றும் அடையாளம் காட்டக் கூடிய ஒரு கும்பல் அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் தாக்கியுள்ளது இதில் மூன்று பேருக்கும் கை மற்றும் தலையில் வெட்டு ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து காயமடைந்த மூன்று பேரும் இந்தச் சம்பவம் தொடர்பாக சிப்காட் காவல் நிலையத்தில் புகார் அளித்ததுடன் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்ந்துள்ளனர். இந்த நிலையில் சிப்காட் காவல்துறையினர் பிரதீப் புகார் அளித்த நபர்கள் மீது உரிய முறையில் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்காமல் முதல் தகவல் அறிக்கையில் உண்மையை மறைத்து அஸ்வின், பரத், முத்தமிழ் மற்றும் கும்பல் மீது வழக்கு பதிவு செய்துள்ள நிலையில் அவர்களை இதுவரை கைது செய்யாமல் இருந்து வருகின்றனர் மேலும் பாதிக்கப்பட்ட பிரதீப் குடும்பத்தினரிடம் நீங்கள் இந்த ஊரை விட்டு காலி செய்து தூத்துக்குடிக்கு சென்று விடுங்கள் எனவும் கூறி வருவதாக கூறப்படுகிறது இந்த நிலையில் தேவேந்திரகுல வேளாளர் வகுப்பைச் சேர்ந்த அஸ்வின், பரத், முத்தமிழ் உள்ளிட்டோர் தங்களை பிரதீப் மற்றும் அவரது சகோதரர்ஜாதியை சொல்லி திட்டியதாகவும் எனவே வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும் எனதூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளனர்.



# வத்தலகுண்டுவில் ஆணவக் கொலைக்கு தனி சட்டம் கோரி வி.சி.க ஆர்ப்பாட்டம்!

வத்தலகுண்டு,நவ.7

வத்தலகுண்டுவில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் காளியம்மன் கோவில் அருகே நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய துணைச் செயலாளர் மூர்த்தி தலைமை தாங்கினார். ஒன்றிய பொருளாளர் திராவிடன்,வணிகரணி மாவட்ட துணை அமைப்பாளர் ராமலிங்கம்,ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர்கள் மதுரைவீரன், காட்டுராஜா, பேரூர் துணைச்செயலாளர் டக்கர்ராஜா,காட்சி ஊடக மைய்ய மாவட்ட பொறுப்பாளர் ராஜ்வளவன்,முகாம் செயலாளர் மாயா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விசிக நிர்வாகி அலாவுதீன் வரவேற்றார். நில உரிமை மீட்பு இயக்க மாநில துணைச் செயலாளர் உலகநம்பி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.ஆர்ப்பாட்டத்தில் விசிக தொல் திருமாவளவன் மீது சாதிய மதவாத கும்பல் தினம் தினம் திட்டமிட்டு வஞ்சிக்கப்படுவதும் தேசத்தில் ஒரு பதட்டத்தை ஏற்படுத்த நினைக்கும் சாதிய மதவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும்,இந்திய தலைமை நீதியரசர் கவாய் மீது செருப்பு வீசிய ராக்கேஷ்கிஷோரை தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி வலியுறுத்தப்பட்டது.சாதி மறுப்பு திருமணத்தால் ஏற்படும் ஆணவ படுகொலைகளை தடுக்க தமிழகத்தில் உடனேதனிச்சட்டம்இயற்றவேண்டுமென தமிழக அரசை வலியுறுத்தினார்.விசிக தலைவர் தொல் திருமாவளவனுக்கு ஜெட் பாதுகாப்பு வழங்க மத்திய அரசை வலியுறுத்தியும்,வத்தலகுண்டு பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை நெடுஞ்சாலை துறையினர் பாரபட்சமின்றி அகற்றி போக்குவரத்து நெரிசலை சரி செய்ய வேண்டுமெனவும் வத்தலகுண்டு பேரூராட்சிக்கு உட்பட்ட பெத்தானியா தெருவில் உள்ள 3,4,6 ஆகிய வார்டுகளில் சாலை,கழிவுநீர் வாய்க்கால்,மின்விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் கேட்டு மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் பணிகளை செய்து தராமல் இருப்பதால் பொதுமக்கள் பலமுறை பேரூராட்சி நிர்வாகத்திடம் வலியுறுத்தி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத சூழ்நிலையில் விரைவில் சாலை மறியலில் ஈடுபடப் போவதாக கூறினார்கள். ஆர்ப்பாட்டத்தில் திரைப்பட இயக்குனர் ரெங்கராஜன்,ஆறுமுகம்,கார்த்தி,கருணாமூர்த்தி,ராஜா,அலாவுதீன்,மாதவன்,கருப்பு,தங்கம் மற்றும் மாநில,மாவட்ட மகளிரணி,துணை நிலைய அமைப்பு பொறுப்பாளர்கள்,சமத்துவ வழக்கறிஞர் அணி,அம்பேத்கர் ஆட்டோ நிலையம்,ஒன்றிய,நகர,பேரூர் முகாம் பொறுப்பாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.முடிவில் வழக்கறிஞர் திருமாச்செழியன் நன்றி கூறினார்.

## கலை பண்பாட்டுத் துறை சார்பில்

# தஞ்சாவூர் மாவட்ட நாட்டுப்புறக் கலைஞர்கள் சந்திப்பு, கலைப் பயிற்சி அளித்தல்,நலிவுற்ற கலைஞர்களுக்கு ஓய்வூதிய விண்ணப்பம் ஆய்வு!

## குறைகள் அறிந்திடல் நிகழ்ச்சி!!

தஞ்சாவூர். நவ.7.

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகில் அண்ணா நூற்றாண்டு விழா அரங்கத்தில் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம் கலை பண்பாட்டுத் துறை, சார்பில், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாட்டுப்புறக் கலைஞர்களை சந்தித்து கலைஞர்களுக்கு கலைப் பயிற்சி அளித்து நலிவுற்றக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் விண்ணப்பம் அளித்துள்ள கலைஞர்களை நேரில் ஆய்வு செய்து, கலைஞர்களின் குறைகளை கேட்டு அறிந்திட தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் ம. இராஜாராமன் ஏற்பாடு செய்திருந்தார்.இந்நிகழ்ச்சிக்கு தஞ்சாவூர் சவகர் சிறுவர் மன்றத் திட்ட அலுவலர் மு. வடிவேல் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தஞ்சாவூர் முகாமில் பா. பிரியங்கா பங்கஜம் கலந்து கொண்டு பயிற்சிப் பெற்ற நாட்டுப்புறக்கலைஞர்களை பாராட்டி, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி விழாப்பேருரையாற்றினார். திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகரன், தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் டி. கே.ஜி.நீலமேகம், தஞ்சை மாநகராட்சி மேயர் சண். ராமநாதன், மாநகராட்சி துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் ம. இராஜாராமன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இக்கலைப் பயிற்சியில் கலைப் பயிற்றுநர்களாக நாட்டுப்புறப் பாடகர்கலைமாமணி சின்னபொண்ணு குமார், மத்திய அரசு விருது பெற்ற பொய்க்கால்குதிரையாட்டக் கலைஞர் நாடிரான் ஜீவராவ், கரகாட்டக்கலைஞர் கலைமாமணி தேன்மொழி ராஜேந்திரன், தப்பாட்டக் கலைஞர் இரா. மதியழகன், நாதஸ்வரக் கலைஞர் கலைச் சுடர்மணி அ.பாண்டியராஜன், பேண்டு வாத்தியக் கலைஞர் ஆரோக்கியதாஸ். நாதஸ்வரக் கலைஞர் கலைச் சுடர்மணி பி.எம். இளையராஜா, புலியாட்டக் கலைஞர் ஏசுதாஸ். இலாவணிக் கலைஞர் நா. ஜோதிவேல், கிராமியக் கலைஞர் மாரியப்பன். பேண்டு வாத்தியக் கலைஞர் பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.வல்லம் சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மைய ஓவிய ஆசிரியர் மாதவன் நன்றியுரையாற்றினார்.



நாட்டுப்புறக் கலைஞர்களை சந்தித்து கலைஞர்களுக்கு கலைப் பயிற்சி அளித்து நலிவுற்றக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் விண்ணப்பம்

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



உளுந்தூர்பேட்டை நீதிமன்ற வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாடு நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்மையத்தை இன்று சார்பு நீதிபதி திரு. ஆறுமுகம் மற்றும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. மணிக்கண்ணன் மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் பொன். ராவணன், அன்பழகன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் நீதிபதிகள் கோமதி, அஜித் சிங் ராஜா, மதுமிதா, அரசு வழக்கறிஞர்கள் இளமுருகன், வெங்கடேசன், வழக்கறிஞர்சங்கர்தலைவர் ஆடலரசன், செயலாளர் தேவராஜ், பொருளாளர் ஜெயரட்சகன் உள்ளிட்ட மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# விளையாட்டில் வெற்றி பெற ஆரோக்கியமான அன்றாட பழக்கங்கள் அடிப்படை !

## நல்ல வாய்வழி ஆரோக்கியம் முக்கியம்: ராகுல் டிராவிட்!!

சென்னை, நவ.7

பிரேக்ஃபாஸ்ட் வித் சாம்பியன்ஸ் நிகழ்ச்சியின் சமீபத்திய எபிசோடில், கிரிக்கெட் ஜாம்பவான் இந்திய தலைமை பயிற்சியாளருமான ராகுல் டிராவிட், உச்சநிலை விளையாட்டு தயாரிப்பில் பெரும்பாலும் கவனிக்கப்படாத வாய்வழி ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தினார்.



இன்றைய மிகுந்த போட்டித்தரத்தில், “சிறிய விஷயங்களுக்குக் கூட அளிக்கும் கவனமே வெற்றியின் ‘1% வித்தியாசத்தை’ உருவாக்குகிறது” என அவர் கூறினார்.

டிராவிட், எஃப்சி பார்சிலோனாவின் பயிற்சியாளர் ஹன்சிஃப்ளிக், விளையாட்டு வீரர்களுக்கு உடல் பரிசோதனைகள் வாய்வழி ஆரோக்கிய பரிசோதனையையும் கட்டாயமாக்கி இருப்பதை எடுத்துக்காட்டாக கூறினார்.

இது உலகளவில் வாய்வழி ஆரோக்கியம், சாதாரண பழக்கத்திலிருந்து செயல்திறன் மேம்பாட்டு உறுதிப்படுத்தும் முக்கிய அம்சமாக உயர்ந்து வருவதை காட்டுகிறது. ”ஒரு தொழில்முறை விளையாட்டு வீரராக உங்களை பராமரிக்க வேண்டுமெனில், வாய்வழி ஆரோக்கியத்தையும் கவனிக்க வேண்டும்,” என அவர் தெரிவித்தார்.

சிறப்பான வாய்வழி ஆரோக்கியம், உடல்நலம் தடைகள் மற்றும் கவனச் சிதறலை தவிர்த்து வீரர்களுக்கு கூடுதல் முன்னிலை வழங்கும் என டிராவிட் கூறினார். “பிரச்சினைகளைத் தவிர்க்கலாம், சிறப்பாக செயல்படவும்” என்ற தெளிவான அணுகுமுறையை அவர் முன்வைத்தார். வாய்வழி ஆரோக்கியம், விளையாட்டில் வெற்றி பெறும் முயற்சியில் அமைதியான ஆகும் ஆனால் முக்கியமான பங்காற்றுவதாக டிராவிட் நினைவூட்டினார்.



## புதுக்கோட்டை அருகே

# சி.பி.ஐ. கட்சியின் ஒன்றிய குழு மற்றும் கிளை செயலாளர்கள் கூட்டம்!

புதுக்கோட்டை,நவ.7

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய குழு மற்றும் கிளை செயலாளர்கள் கூட்டம் கீரமங்கலம் முத்தமிழ் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய குழு பூமதி தலைமையில் நடைபெற்றது. முடிவுற்ற வேலைகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் தமிழ்மாறன் தாக்கல் செய்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் செங்கோடன் விளக்கி பேசினார். எதிர்கால திட்டம் குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் மாதவன் பேசினார்.

கோரிக்கை. தமிழக அரசு பத்திரப்பதிவு துறையில் வழிகாட்டி மதிப்பை விட 30% கூடுதலாக உயர்த்தி பத்திர பதிவு கட்டாயப்படுத்துவதை நீக்க கோரியும், தமிழக அரசு வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருள்கள் தாமதம் இன்றி வழங்க கோரியும்,

கீரமங்கலத்தில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி பழைய கட்டிடத்தை அகற்றி புதிய கட்டிடம் கட்டி தரக் கோரியும், கீரமங்கலத்தில் புதிதாக ஸ்டேட் பேங்க் அமைத்து தர கோரியும், திருவரங்குளம் ஒன்றியத்தில் உள்ள அனைத்து ரத்துவாரி நீர்நிலை ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றக் கோரியும்,

வில்லுனி ஆறு அம்புலி ஆறு ஆகிய 2 ஆறு வரத்து வாரி ஆக்கிரப்புகள் அகற்றி உடனடியாக போர்க்கால அடிப்படையில் விரைந்து தூர்வாரும் படியும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட குழு செல்வகுமார், திலகர், முருகன், செல்வராஜ் ஒன்றிய குழு பவானந்தம். மாசிலாமணி, ஆறுமுகம், கலையரசன், சீனிவாசன் ராஜேந்திரன், மணி மற்றும் கிளை செயலாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் 72 திண்டிவனம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சலவாதி பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்த பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் துணை ஆட்சியர் (மாநில நெடுஞ்சாலை) திரு.லூர்துசாமி, மரக்காணம் வருவாய் வட்டாட்சியர் திருமதி நீலவேணி உட்பட பலர் உள்ளனர்.

## மாநில அளவில் தடகள போட்டியில் ஈட்டி எறிதல் வெற்றி பெற்ற

# அரசம்பட்டி முத்தமிழ் அரசு மேல்நிலைப் பள்ளி +2 மாணவன்!



போச்சம்பள்ளி,நவ.7

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த அரசம்பட்டி முத்தமிழ் அரசு மேல்நிலைப்பள்ளி மாநில அளவிலான தடகள போட்டி தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்றது இப் போட்டியில் எங்கள் பள்ளியை சேர்ந்த +2 மாணவன் திருமலைவாசன் ஈட்டி எரிதல் போட்டியில் பங்கேற்று அம்மாணவன் சான்றிதழ்களுடன் பள்ளி திரும்பிய மாணவனை பள்ளி தலைமையாசிரியர் அவர்கள் மற்றும் முதுகலை தாவரவியல் ஆசிரியர் இணைந்து சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள் உடற் கல்வி ஆசிரியர் பார்த்திபன் மற்றும் இளைய பல்லவன் நன்றி பாராட்டினார்கள்.

## தூத்துக்குடியில் நடைபெற்ற அகில இந்திய கூடைப்பந்து போட்டி:

# வெற்றி பெற்ற அணிக்கு பரிசு கோப்பை!

தூத்துக்குடி நவ.7

தூத்துக்குடி மாவட்ட கூடைப்பந்து கழகம் சார்பில் 15வது அகில இந்திய அளவிலான கல்லூரி மாணவர் மற்றும் மாணவிகளுக்கான கூடைப்பந்து போட்டி ஜிம்கானா கிளப் விஎன்எம்ஏடி ராமகிருஷ்ணன் நினைவு கூடைப்பந்து மைதானத்தில் மின்னொளியில் 5நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் போட்டிகளை மேயர் ஜெகன் பெரியசாமி தொடங்கி வைத்தார். மாணவர்களுக்கான இறுதிப்போட்டியில் சென்னை இந்துஸ்தான் கல்லூரியும், பெங்களூரு ஜெயின் பல்கலைக்கழகமும் விளையாடியது. இப்போட்டியில் இந்துஸ்தான் கல்லூரி அணி 77:67 என்ற புள்ளி கணக்கில் ஜெயின் பல்கலைக்கழக அணியை வென்று முதலிடம் பெற்றது. முதலிடம் பெற்ற இந்துஸ்தான் கல்லூரி அணிக்கு வ.உ.சி துறைமுக ஆணைய சுழற் கோப்பை மற்றும் ரூ.50000 ரொக்கப்பரிசும் வழங்கப்பட்டது. 2ம் இடம் பிடித்த ஜெயின் பல்கலைக்கழக அணிக்கு சுழற்கோப்பை மற்றும் ரூ.40000 வழங்கப்பட்டது. மூன்றாம் மற்றும் நான்காம் இடத்துக்கான போட்டிகளில் கேரளா வர்மா கல்லூரி அணியும் கிரைஸ்ட் பல்கலைக்கழக பெங்களூரு அணியும் விளையாடி 74:73 என்ற புள்ளி கணக்கில் கேரளா வர்மா கல்லூரி அணி 3ம் இடமும் பெங்களூரு கிரைஸ்ட் பல்கலைக்கழகம் நான்காம் இடம் பெற்றனர். தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி சுழற்கோப்பைக்கான பெண்கள் லீக் போட்டிகளில் முதல் இடத்தை ஜெயின் பல்கலைக்கழகம் பெங்களூரு அணி 69:60 என்ற புள்ளிக்கணக்கில் சென்னை எம்.ஓ.பி வைஷ்னவா கல்லூரி அணியை வென்று பெங்களூரு ஜெயின் பல்கலைக்கழக அணி தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி சுழற் கோப்பை மற்றும் ரூ.50000 பரிசுத்தொகை வென்றனர். இரண்டாமிடம் பிடித்த எம்.ஓ.பி வைஷ்னவா கல்லூரி அணிக்கு சுழற்கோப்பை மற்றும் ரூ.40000 பரிசுத் தொகைவழங்கப்பட்டது. போட்டிகளில் மூன்றாமிடம் லொயோலா கல்லூரி அணி சென்னை மற்றும் நான்காம் இடம் கேரளா அல்போன்சா கல்லூரி அணியும் பிடித்தார்கள். பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாவட்ட கூடைப்பந்து கழக தலைவர் விவிடி பிரம்மாணந்தம் வரவேற்புரை ஆற்றினர். துறைமுக பொறுப்பு ஆணையத் தலைவர் சுஷாந்தகுமார் பிரோகித் சிறப்புரையாற்றி சுழற் கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார். மாவட்ட கூடைப்பந்து செயலாளர் சாகுல் சிராஜிதின் நன்றியுரை ஆற்றினார்.

# புதூர் நாடு மலைப்பகுதியில் சமூக நல்லிணக்க விழிப்புணர்வுக் கூட்டம்!

திருப்பத்தூர் நவ.7

திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் வி.சியாமளா தேவி தலைமையில், மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்தரவல்லி முன்னிலையில் திருப்பத்தூர் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புதூர் நாடு மலைப் பகுதியில் மலை கிராம மக்களுக்கு, திருப்பத்தூர் மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பாக சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி நாட்டுப்புற கலைகள் பேச்சுப் போட்டி, நடன போட்டி, கட்டுரைபோட்டி போன்ற போட்டிகளில் மூலமாக மாபெரும் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வில் பொது மக்களுக்கு POCSO, குழந்தை திருமணம், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இணையவழி குற்றம், போதைப் பொருட்கள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள், போக்குவரத்து விதிமுறைகள், விதிமீறல்கள் அவசர உதவி எண்கள் 100,181, 1098 ,1930 Kaaval udhavi App, இயற்கை வளங்களை பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இறுதியில் போட்டியில் வெற்றி பெற்றவர் களுக்கு நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார் கள்.

இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் மாவட்ட வன அலுவலர் மகேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.நாராயணன், சிறப்பு அரசு வழக்கறிஞர் திருப்பத்தூர் அமர்வு நீதிமன்றம் சுந்தரமூர்த்தி, மாவட்ட குற்ற ஆவண காப்பக துணை காவல் கண்காணிப்பாளர் குமரன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.





# சமூக விரோதி கூடாரமாக மாறிவிட்ட பத்திரப்பதிவு அலுவலக கட்டிடம்!

விழுப்புரம்,நவ.7

விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் ஒன்றியம் விழுப்புரம் (டு )நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலையில் சர்வீஸ் சாலையில் கண்டமங்கலம் பத்திரப்பதிவு அலுவலகம் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்தது, இப்பொழுது நடைமுறையில் இல்லை.

தேசிய நெடுஞ்சாலைகளால் சாலை பணிக்காக இடம் சர்வேயர் பண்ணி இடம் எடுக்கப்பட்டது,

அப்பொழுது கண்டமங்கலம் பகுதியில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த பத்திரவு பதிவு அலுவலகம் கட்டிடம் முகப்பு இடிக்கபட்டிருக்கிறது, இப்பொழுது இந்த கட்டிடம் பாழடைந்த நிலையில் இருக்கின்றன , சமூக விரோதி கூடாரங்கள் மாறிவிட்டன குப்பை மற்றும் இரட்சி கழிவுகள் அங்கே பத்திரப்பதிவு அலுவலகம் கட்டிடம் எதிரே உள்ளேயும் கொட்டிக் கிடக்கின்றன.

குப்பை இறைச்சி கழிவுகளால் துர்நாற்றம் வீசுகிறது அருகில் கண்டமங்கலம் வள்ளலார் மேல்நிலைப்பள்ளி இயங்கிக் கொண்டிருக்கிறது .

இதனால் பள்ளி மாணவர்கள் மாணவிகள் மதியம் உணவு அருந்தும் பொழுது துர்நாற்றம் வீசும் போது வாந்தி வருவதாக கூறியிருக்கிறார்கள்.

அங்கே இருக்கும் சுற்று வட்டார மக்களுக்கும் குப்பை இறைச்சி கழிவுகளால் நோய் தொற்று துர்நாற்றம் அபாயம் அப்பகுதி பொதுமக்கள் கூறுகிறார்கள் பத்திரப்பதிவு அலுவலகம் இருக்கும் இடம் அரசுக்கு சொந்தமான இடம் தேசிய நெடுஞ்சாலையில் மற்றும் சர்வீஸ் சாலையில் பத்திரப்பதிவு அலுவலகம் சரி செய்து பழைய நிலைமைக்கு வந்து இயங்க வேண்டும் என்று பொது மக்களின் கோரிக்கையாய் உள்ளது.

## புதுக்கோட்டை அருகே

# முதலாம் ஆண்டு கல்லூரி மாணவர் கிணற்றில் சகலமாக மீட்பு; போலீசார் விசாரணை!

புதுக்கோட்டை நவ.7

புதுக்கோட்டை அடுத்த வம்பன் வேளாண்மை கல்லூரியில் முதலாமாண்டு படித்து வந்த புதுக்கோட்டை மாவட்டம் மழையூர் கீழப்பட்டி கிராமத்தைச் சேர் ந்த 17 வயது மாணவன் வீட்டின் அருகே உள்ள கி ணற்றில் சடலமாக மீட்பு,



வேளாண் கல்லூரியில் படிக்க விருப்பம் இல்லாததால் மாணவன் தற்கொலை செய்து கொண்டாரா? என சடலத்தை கைப்பற்றி போலீசார் விசாரணை★

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே உள்ளமழையூர்கீழப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் அமரே சன். இவரது 17 வயது மகன் சிலம்பரசன். இவர் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள வம்பன் வேளாண்மை கல்லூரியில் முதலா மாண்டு படித்து வந்துள்ளார். இந் நிலையில் மாணவன் சிலம்பரசனுக்கு வேளாண்மை கல்லூரியில் பயில விருப்பம் இல்லை என் று கூறப்படுகிறது. இந்நிலையில் கடந்த 3ம் தேதி சிலம்பரசன் கல்லூரிக்கு செல்வதாக கூறிவிட்டு சென்ற நிலையில் பின்னர் கல்லூரிக்கு செல்லாம ல் வீடு திரும்பியதாக கூறப்படுகிறது. இதனையடுத்து சிலம்பரசனின் தந்தை அமரேசன் சிலம்பரசனை வேளா ண்மை கல்லூரியில் தான் படிக்க வேண்டும் என்று கண்டித்து பின்னர் சிலம் பரசனை வேளாண்மை கல்லூரிக்கு அழைத்துச் சென்று கல்லூரியில் விட்டுவிட்டு பின்னர் மீண்டு ம் வீட்டிற்கு அழைத்து வந்ததாக கூறப்படுகிறது.

பின்னர்சிலம்பரசனிடம் இருந்த மொபைல் ஃபோனையும் அவரது தந்தை அமரேசன் பிடுங்கி வைத்ததாக கூறப்படுகிறது. ஏற்கனவே வேளாண்மை கல்லூரியில் படிக்க விருப்பமில்லாமல் இருந்த சிலம்பரசனுக்கு அவர் பய ன்படுத்தும் செல்போனையும் அவரது தந்தை பிடு ங்கி வைத்துக் கொண்டதால் மன உளைச்சலில் இருந்ததாக கூறப்படு கிறது. இந்நிலையில் தான் சிலம்பரசனின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள பன்னீர் என்பவருக்கு சொந்தமா ன கிணற்றில் சிலம்பரசனின் உடல் மிதந்துள்ளது. இதனைப் பார்த்த அப்பகுதியினர் சிலம்பரசனின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்த நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற சிலம்பரசனின் பெற்றோர் சிலம்பரசன் உடல் மிதப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்து கதறி அழுதுள்ளனர். பின்னர் சம்பவ இடத்திற்கு தீயணைப்புத் துறையி னரும் மழையூர் காவல்துறையினரும் சென்ற நி லையில் கிணற்றில் சடலமாக கிடந்த சிலம்பரசனி ன் உடலை தீயணைப்புத் துறையினர் மீட்டு காவல் துறையிடம் ஒப்படைத்தனர். பின்னர் அந்த சடலத்தை கைப்பற்றிய காவல் து றையினர் மாணவன் சிலம்பரசன் வேளாண்மை கல்லூரியில் படிக்க விருப்பம் இல்லாமல் இருந்த நிலையில் தொடர்ந்து அதே கல்லூரியில் படிக்க வேண்டும் என்று அவரது தந்தை வற்புறுத்தியதா லும் அவரது மொபைல் ஃபோனை பிடுங்கி வைத்துக் கொண்டதாலும் மன உளைச்சல் ஏற்பட்டு சிலம் பரசன் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாரா? என்ற கோணத்தில் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

மேலும் சிலம்பரசனின் உடலை உடற்கூறு ஆய்வுக் காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மழையூர் போலீசார் அனுப்பி வை த்தனர். இந்த சம்பவம் மழையூர் மற்றும் அதன் சுற் றுவட்டார பகுதிகளில் பெரும்சோகத்தை ஏற்படு த்தி உள்ளது.



திருப்பத்தூர் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புதூர் நாடு மலைப்பகுதியில் மலை கிராம மக்களுக்கு, திருப்பத்தூர் மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பாக சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி நாட்டுப்புற கலைகள் பேச்சுப் போட்டி, நடன போட்டி, கட்டுரை போட்டி போன்ற போட்டிகளில் மூலமாக மாபெரும் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

# சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கில் பெண்கள் பாதுகாப்பு குறித்து குறும்படம் வெளியீடு

## சிறப்பு விருந்தினராக முன்னாள் நீதிபதி பாலசந்திரன் பங்கேற்பு



























அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் தேசிய கௌரவ தலைவர் முனைவர் நீதியரசர் மாண்புமிகு கற்பக விநாயகம் அவர்களின் வழிகாட்டுதல் படி இவ்வமைப்பின் நிறுவனத்தலைவர் முனைவர் ஆர்.கே.குமார் தலைமையில் சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு கோவை ஏடிடி காலனி பகுதியில் உள்ள கேரளா கிளம்பி உள்ள அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பெண்கள் பாதுகாப்பு குறித்த குறும்படம் மற்றும் சுற்றுச்சூழலை காக்க மரம் வளர்ப்பது குறித்த குறும்படங்கள் வெளியிடப்பட்டது.

இந்த குறும்படங்களில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்தும் எவ்வாறு தங்களை சட்டப்படி காத்துக்கொள்ள வேண்டும் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக வெளியிடப்பட்டது.மேலும் பசுமையான சுற்றுச்சுழலை உருவாக்கும் நோக்கில் மரங்களை பாதுகாப்பு மற்றும் புதிய மரங்களை நடுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை எடுத்துரைக்கும் விதமாக இந்த குறும்படம் அமைந்திருந்தது.

இந்த கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக முன்னாள் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி மற்றும் முன்னாள் மாவட்ட நுகர்வோர் குறைதீர்ப்பு ஆணையத்தின் தலைவர் பாலசந்திரன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அவர் பேசும் போது பொதுமக்கள் என்னென்ன காரணங்களுக்காக நுகர்வோர் நீதிமன்றத்தை அணுகலாம், எவ்வாறு அணுகலாம்என்பதனைவிரிவாகவிழிப்புணர்வுஏற்படுத்தும்வகையில் பேசினார். அதுமட்டுமின்றி தான் நீதிபதியாக பணியாற்றிய காலத்தில் நுகார்வோர் வழக்குகளை எவ்வாறு விசாரித்த ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நீதி வழங்கினார் என்பதை விரிவாக உரையாற்றினார். இந்த கருத்தரங்கில் இந்தியா சட்டம் என்ற தலைப்பில் மூத்தவழக்கறிஞர்சுந்தரவடிவேலு உரையாற்றினார்.அவர்பேசுகையில் இந்தியாவின் சுதந்திர அடைந்த போது பிரிட்டிஷ் அரசு நமக்கு எவ்வாறு சுதந்திரம் வழங்கியது, எந்தெந்த பகுதிகளைநமக்குதந்தனர்அதேபோல் புதுக்கோட்டை, டெல்லி, டையூர், டாமன், திருச்சூர்போன்றபகுதிகளில் நாம் 1950ல் குடியரசு அடைந்த போது எவ்வாறு இந்தியாவுடன் இணைந்தது.அதற்கு எவ்வாறு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உதவிகரமாக இருந்தது. அதேபோல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் தான் உலகத்திலேயே சிறந்து விளங்குகிறது அதற்கு காரணம் ஜனநாயக ரீதியில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பாபாசாகேப் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் தலைமை அமைந்துள்ளது. இன்று வரை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 108 முறைகளுக்கு மேல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.என விரிவாக பேசினார்.

இவரை தொடர்ந்து சட்டமே பாதுகாப்பு என்ற தலைப்பில் மூத்த வழக்கறிஞர் தேன்மொழி இந்திய அரசியல் அமைப்பு சட்டம் எவ்வாறு வெகுஜன மக்களை பாதுகாப்பு வழங்குகின்றது என்பதனை மிகவும் தெளிவாகவும் அனைவரும் எளிதில் புரியும் வகையில் எடுத்துரைத்தார். அவரை தொடர்ந்து பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு என்ற தலைப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வழக்கறிஞர் பரமேஸ்வரிபேசினார்.அவர்பேசும்போது அலுவலகத்தில்பணிபுரியும் பெண்களுக்கு எவ்வாறு எல்லாம் பாலியல் துன்புறுத்தல் வருகின்றது அதை எவ்வாறு எதிர் கொள்வதும் என்றும் குழந்தைகள் மீது பாலியல் சீண்டல் செய்தல் அவர்களுக்கு தூக்கு தண்டனை வழங்கும் வகையில் நமது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதனை சிறப்பாக எடுத்துத் எடுத்துரைத்தார். மேலும் சட்டம் நமக்கு பாதுகாப்பாக இருக்கின்றது சட்டத்தை எவ்வாறு அணுகுவது என்பதில் தான் பெண்களுக்கு விழிப்புணர்வு இல்லை அந்த பணியை செய்து வரும் அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகம் சிறப்பாக செய்து வருகின்றது அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைதெரிவித்துக்கொள்கிறேன்எனஉரையாற்றினார்.இவர்களை தொடர்ந்து பேசிய கட்டிடக்கலை பீடம்,கற்பகம் உயர்கல்வி அகாடமியின் நிறுவனத்தலைவர் கதிரவன் பேசுகையில் இன்றைய சூழ்நிலையில் மாணவர்கள் போதை பழக்கங்களுக்கு அடிமையாகி வருவதையும், மேலும் அவ்வாறு அடிமையாக இருப்பதால் சமூக எவ்வாறு சீரழிகிறது என்பதை மிகவும் மிகவும் வேதனையுடன் எடுத்துக்கூறினார். மேலும் தான் முதல்வராக பணியாற்றி வரும் கல்லூரியில் நடந்த நிகழ்வை எவ்வாறு சட்டப்படியும் மனிதாபிமானத்துடன் எவ்வாறு எதிர் கொண்டார் என்பதை விளக்கி கூறினார். அதேபோல இன்றைய காலத்தில் சட்ட விழிப்புணர்வு எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு மாணவர்களுக்கு ஒழுக்கம் என்பது மிகவும் அவசியமான ஒன்று ஆகவே ஒழுக்கம் குறித்து ஒரு குறும்படம் எடுக்க வேண்டும். அதை உயர்நிலைப்பள்ளி படிப்பான் 6 ம் வகுப்பு முதல் கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு காட்சி படுத்த வேண்டும் என கூறினார்.இந்த பணி அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகம் செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்து தனது உரையை நிறைவு செய்தார்.

நிகழ்வில் இறுதியாக சிறந்த முறையில் பணியாற்றியவர்களான மாவட்டதுணைதலைவர்கள்செந்தில்குமார்,வழக்கறிஞர்ஜெயபிரகாஷ், டாக்டர் ராஜேந்திரன்,மோகனசாமி,சந்தீப் ஆரோக்கிராஜ்,மகளிரணி மாவட்ட துணை தலைவர் எல்ஐசி சாந்தி ஆகியோருக்கு பாராட்டு மாற்றுதல் வழங்கப்பட்டது.

இந்த கருத்தரங்கிற்கு இவ்வமைப்பின் பொதுச்செயலாளர் வி.எச். சுப்ரமணியம் விழா பேருரையாற்றினார்.இவவமைப்பின் மாநில மகளிரணி தலைவி லதா அர்ஜூனன்,மாநில தலைவர் ராஜேஷ்குமார் ஆகியோர்தலைமை வகித்தார்.திருப்பூர் மாவட்ட துணைத் தலைவரும் குறும்பட இயக்குனருமான குமார் தங்கவேல் குறும்படம் குறித்து விளக்கஉரையாற்றினார்.இந்தநிகழ்ச்சியைஇவ்வமைப்பின்இயக்குனர் ஐஸ்வர்யா தொகுத்து வழங்கினார். சிவக்குமார் இவ்வமைப்பின் நிறுவனத்தலைவர் முனைவர் ஆர்.கே.குமார் அவர்களிடம் விண்ணம் வழங்கி தன்னை இணைத்துக்கொண்டார்.

இந்த நிகழ்வில் ரம்யா பாபு, கிருஷ்ணகுமார், சிவசங்கர்,அமிர்த லிங்கம், டிராவல்ஸ் ரமேஷ்,விஜயராவ், வழக்கறிஞர் சுரேஷ்,திருப்பூர் ராமசாமி மற்றும் அமைப்பின் பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள்,பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.